**MCOP NO: 4178/2023** **DATE: 09.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு.கௌத்தம்

த/பெ : திரு. கோபி

வயது : 28

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 09.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**மசா 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்ககு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அது என் வசம் உள்ளது. வழக்கிற்காக நான் ஓட்டுநர் தொழில் செய்துவந்தேன் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு முகத்தில் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுவதுமாக குணமடைந்துவிட்டதால் எனக்கு எந்தவித இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மசா ஆ 4 ஆன மருத்துவ பில்களை இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணத்தடன் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசா ஆ 4 க்குண்டான கன்சாலிடேட் பில்லை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.